## வெலிகந்த பிரதேச சபை
## பொலன்னறுவ மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிகந்த பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. |

#### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,333,667 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்ற தண்டப்பண தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஜூலை மாதம் வரையான தகவல்களே கிடைத்திருந்தன. |
| (ii) | சபைக்குச் சொந்தமான JCB இயந்திரம் மற்றும் டிப்பர் வண்டி வாடகைக்கு கொடுப்பதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 142,375 தொகை உழைத்திருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அவ்வருமானம் ரூபா 112,375 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வாடகை வருமானத்தை அறவீடு செய்யும் போது வருமானத் தலைப்பு மாற்றமடைந்த காரணத்தினால் வாடகை வருமானம் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. |

### (இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண அறிக்கையின் படி ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட நீர்க் கட்டண வருமானம் ரூபா 18,865,535 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 19,029,925 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் அவ்வருமானத்தில் ரூபா 164,390 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரியான பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட நீர் வருமானத்தில் LG பண்ணைக்கு வழங்கப்பட்ட நீருக்காக அறவிடப்பட்ட நீர்க்கட்டணம் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர தகவல் அறிக்கையின் படி அவ்வருமானங்களின் ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 813,540 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்கூறிய வருமானத் தலைப்புக்களின் வருமானம் ரூபா 631,350 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 182,190 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரியான பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர தகவல் அறிக்கைகளில் விளம்பர மற்றும் அறிவித்தல் பலகை வருமானமும் உட்படுத்தப்பட்டிருந்தது. |

### (ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 355,324,466 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வுக்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டடங்கள் கிடைத்திருந்த முறை உரிமையை உறுதிப்படுத்தல் தொடர்பான சரியான தகவல்கள் சபையில் காணப்படவில்லை என ஏற்றுக்கொள்வதுடன், தற்போது அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்துதல் மற்றும் சொத்துக்களை உரித்தாக்கும் போது மிகவும் சிறந்த முறையில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். பண்டக் கணிப்பீடு அலுவல்கள் தற்போது |

மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த கணிப்பீட்டு சபை அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா.** | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | | |
| | பிரிவு 152(1) | 15,000 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிருவப்பட்டிருந்த 05 தொலைபேசி செலுத்துகை கோபுரங்கள் தொடர்பாக வர்த்தக / வியாபார வரி அறவீடு செய்திருக்கவில்லை. | தொலைபேசி கோபுரக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | | |
| (i) | விதி 59 | - | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான அட்டவணைகள் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். | நிரந்தர வருமான பரிசோதகர்கள் இன்மையால் குறிப்பிட்ட கணிப்பீடு உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமல் போனது. |
| (ii) | விதி 185 | 24,298,929 | நடைமுறைக் கணக்கில் ஆண்டு பூராகவும் ரூபா 13 மில்லியன் முதல் ரூபா 24 மில்லியன் வரை தொகையொன்று | மிகைப் பணத்தை முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்ட போதிலும் மிகைப்பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>---------------------------- | | | | |
| 03/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக் கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | 88,500 | மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த முன்பணத் தொகை 92 நாட்கள் முதல் 152 வரை கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | முற்பணங்கள் கால தாமதம் இன்றி தீர்க்கப்பட வேண்டும். | முற்பணம் தீர்த்தல் தாமதம் அடைந்ததை ஏற்றுக்கொள்கின்றேன். இவ் விடயங்கள் தொடர்பாக மிகவும் கவனத்துடன் செயல்பட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 14 வருடங்களை விட மிகையான காலம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 09 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,279,567 தொகையினை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 14 வருடங்களுக்கு மிகையான காலம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 13,986,835 தொகைக்கான செலவுக் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 468,474 இற்கான தொகை எதிர்காலத்தில் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கும், ரூபா 2,359,561 இற்கான தொகை பிரதேச செயலகத்தில் இருந்தும் மற்றும் ரூபா 7,644,221 இற்கான தொகை ஒன்று உள்ளூராட்சி |

திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு ரூபா 3,514,579 இற்கான தொகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் மிகைத்த ரூபா 5,123,800 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,346,930 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திரண்ட நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 359,000 | 574,500 | 574,500 | (215,500) | 493,600 | 392,600 | 392,600 | 101,000 |
| வாடகை | 4,934,740 | 4,690,144 | 4,713,627 | 221,112 | 4,922,946 | 1,667,450 | 1,946,644 | 2,976,297 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,342,500 | 700,530 | 700,530 | 641,970 | 1,050,000 | 2,843,262 | 2,843,262 | (1,793,262) |
| ஏனைய வரு மானங்கள் | 20,384,800 | 9,177,139 | 22,384,046 | (1,999,246) | 16,005,413 | 9,555,744 | 22,547,570 | (6,242,157) |
| மொத்தம் | 27,021,040 | 15,142,313 | 28,372,703 | (1,351,664) | 22,471,959 | 14,459,056 | 27,730,076 | (4,958,122) |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் குத்தகைக்கு கொடுக்கப்படும் வியாபார நிலையங்களில் இருந்து 12 சந்தர்ப்பங்களில் நிலுவையாக உள்ள | பிரதேச சபைச் சட்டத்தின் 159(1) பிரிவின் | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| குத்தகை ரூபா 554,918 தொகை 02 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரை இடைப்பட்ட காலம் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன், அத்தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரகாரம் செயற்பட வேண்டும். | எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**(ஆ) வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 35 கடையறைகளில் இருந்து மற்றும் 07 மீன் கடைகளில் இருந்து நிலுவை வாடகை தொகை ரூபா 1,999,178 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றின் 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 1,354,562 தொகையாக காணப்பட்டது. அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ii) | செவனபிடிய முதல் கட்டத்தின் 13 கடையறைகளின் வாடகை வருமானம் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மாதாந்தம் ரூபா 2,500 வீதம் அறவிடப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு செய்து அதன்படி வாடகைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இதுவரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. |
| (iii) | செவனபிடிய இரண்டாம் கட்டத்தின் 10 கடையறைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீட்டின் படி 2018 மே 01 திகதி முதல் மாதாந்தம் ரூபா 6,000 வீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த கடையறைகளிலிருந்து மாதாந்தம் ரூபா 2,500 வீதம் அறவிடப்பட்டமையால் 2018 மே 01 முதல் 2019 திசெம்பர் 31 வரை ரூபா 700,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு திணைக்கள பெறுமதி மதிப்பீட்டின் படி வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019.01.14 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இதுதொடர்பான சட்ட ஆலோசனைக்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு குறிப்பிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் பொருத்தம் என சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | செவனபிடிய மூன்றாம் கட்டத்தின் 13 கடையறைகளில் 07 கடையறைகளின் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மாதாந்தம் ரூபா 1,500 வீதம் அறவிடப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு செய்து அதன்படி வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீடு மேற்கொள் ளப்பட்டிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இதுவரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. |
| (v) | செவனபிடிய மூன்றாம் கட்டடத்தின் 05 கடையறைகளுக்கான பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாதாந்த வாடகை மதிப்பீட்டின் படி மாதாந்தம் ரூபா 3,300 வீதம் மற்றும் 07 இலக்க கடையறைக்காக மாதாந்தம் ரூபா 3,000 வீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 1,500 வீதம் அறவிடப்பட்டிருந்தமையால் 2018 மே 01 திகதி முதல் 2019 திசெம்பர் 31 வரை ரூபா 210,000 ற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு திணைக்கள பெறுமதி மதிப்பீட்டின் படி வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019.01.16 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இதுதொடர்பான சட்ட ஆலோசனைக்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு குறிப்பிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் பொருத்தம் என சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (vi) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்தக் கடை வாடகை நிலுவைத் தொகை ரூபா 1,999,178 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 1,335,463 தொகை அதாவது 88 சதவீதம் செவனபிடிய வர்த்தக தொடர் கட்டடத்தின் 36 கடையறைகள் தொடர்பாக நிலுவை காணப்பட்டது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு அல்லது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பல கடையறைகளிலிருந்து நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய நிலுவைத் தொகை தவணைகளாக அறவிடப்படுகின்றது. நிலுவைத் தொகை செலுத்தாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (vii) | செவனபிடிய கடையறை உடன்படிக்கைகளின் நிபந்தனை இலக்கம் 01.11 பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் வாடகை செலுத்துவதற்கு தொடர்ச்சியாக 03 மாதங்கள் புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் கடை வாடகை அறவீடு செய்து கடைகளை பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு அதிகாரம் இருந்த போதிலும் 09 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரை வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்த 23 கடை உரிமையாளர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் செயற்பட்டு நிலுவைத் தொகையை அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 412,615 தொகை நிலுவையாக காணப்பட்டது. | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டின் வருமானக் கணிப்பின் மூலம் அதிகார பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்களை இனங்கண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் விதிக்கப்பட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டும் என இனங்கண்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,071,135 தொகையாக காணப்பட்டதுடன் 2018 ஜூலை மாதம் முதல் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கும், இனங்காணப்படாத வருமானத்தை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் அனைத்து நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை இனங்கண்டு சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சட்டத்தின் பிரிவு 126 இன் படி துணை விதிகள் ஆக்கப்பட்டு கருமங்களை மேற்கொள்வதற்காக பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருந்த போதிலும் அதில் காணப்பட்ட விடயங்களை செயல்படுத்தி யிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் அடங்கியுள்ள விடயங்களை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 02 டொன் குப்பையினை சபைக்கு சொந்தமான அதுகலவில் அமைந்துள்ள அப்புறப்படுத்தும் வளவில் குவிக்கப்படுவதுடன் முறையான திண்மக் கழிவு பொருள் முகாமைதுவ வேலைத்திட்ட முறைமை ஒன்றை தயாரிப்பதற்கு சபைக்கு முடியாதுள்ளது. | குப்பைகளை மீள்சுழச்சி செய்தல் முறையான திண்மக் கழிவுக்பொருள் முகாமைத்துவத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். குப்பை போக்குவரத்துக்கு தேவைப்படும் கொம்பக்டர் வண்டி ஒன்று எங்களிடம் காணப்படவில்லை. அதற்காக எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 2020 அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உக்காத குப்பைகளை விற்பனை செய்யும் நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**<br>ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், அந்த குறிக்கோள்கள் இடையே சபைக்குரிய இலக்குகளை சரியாக இனங்கண்டிருக்காததுடன், குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறை ஒன்று காணப்படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக நிறுவனத்தின் பதவியணியினரை பயிற்சிவிக்கும் நடைமுறை ஒன்று மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக தொடர்புபடுத்த வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கான குறிக்கோளை இனங்காணல், தரவு சேகரிக்கும் நடைமுறை ஒன்றை தயாரித்தல், நிதி ஏற்பாடு மேற்கொள்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களை இனங்காண வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் பதவி, 06 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி பல வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி திணைக்களத்தில் எழுத்துமூல மற்றும் வாய்மொழி மூலம் கோரிய போதிலும் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. |
| (ஆ) | அமைய அடிப்படையில் சாரதிப் பதவி ஒன்று, 03 காவலாளிப் பதவிகள், 02 சுகாதார தொழிலாளர் பதவிகள், 02 மானி வாசிப்பாளர் பதவிகள் ஆக மொத்தம் 08 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். | தேவையின் படி பதவியணி திருத்தப்பட வேண்டும். | நிறுவனம் 14 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போது காணப்பட்ட பதவியணியினர்களை கொண்டு நடைபெறுவதால் பதவியணி பற்றாமையின் காரணமாக அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 2,541,776 தொகைக்கான 11 சொத்து அலகுகள் நீண்ட காலம் முதல் விளைவற்று காணப்படுவதுடன் விளைவற்றுக் காணப்பட்ட காலம் தொடர்பான உறுதிப்பாடு ஒன்று பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. | ஆக்கபூர்வமாக பயன்படுத்தக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். | பழுதுபார்த்து பயன்படுத்தக் கூடிய சொத்துக்களை பயன்படுத்துவதற்கும் பழுதுபார்க்க முடியாத சொத்துக்களை 2019 கணிப்பீட்டு சபை அறிக்கையின் மூலம் வழங்கியுள்ள பரிந்துரையின் படி அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

**3.3.2 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 01 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடாத்த நடவடிக்கை எடுப்பேன். |